# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

**எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032**
**தொலைபேசி 044-22201337**
**மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in**
**இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in**

**முன்னிலை: மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**ஆணை எண்.137/மா/2024**
**நாள் 19.09.2024**

திரு. கோ. கோவிந்தராஜ்,
சென்னை–83. – மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் – 12, – எதிர்மனுதாரர்
பெருநகர சென்னை மாநகராட்சி.

பெருநகர சென்னை மாநகராட்சி, அசோக்நகர், 15 வது தெரு, கதவு எண்.22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ், என்பவரின் 27.08.2024 நாளிட்ட மனு 27.08.2024 அன்று இம்முறை மன்றத்தில் பெறப்பட்டு 137/மா/2024 என எண்ணிட்ட முறையீடு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, அசோக்நகர் 15 வது தெரு, கதவு எண்.22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ், என்பவரின் முறையீட்டு மனுவில் முகலிவாக்கம் மெயின்ரோடு கதவு எண்.5ல் எவ்வித பார்க்கிங் வசதியும் நான்கு புற இடைவெளி இல்லாமல் சுமார் நான்கு தளத்திற்கு மேல் சுமார் 6000 சதுர அடியில் டெல்டா மருத்துவமனை கட்டி கடந்த 2022 –ம் ஆண்டு துவங்கப்பட்டது. இம்மருத்துவமனை சாலை வளைவில் Parking வசதி இல்லாமல் துவங்கப்பட்டதால் அங்கு வரும் வாடிக்கையாளர்கள் வாகனங்களை நடைப்பாதையிலும் சாலைகளிலும் நிறுத்துவதால் அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு மனுதாரர் ஆகிய நானும் மற்றும் அப்பகுதி பொது மக்களும் பாதிக்கப்பட்டு வருவதால், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கு புகார் அளித்தேன். இம்மருத்துவமனை கட்டிட முன்பகுதியில் ராட்சத விளம்பர Boardகள் நடைப்பாதையிலும் நோயாளிகள் அக்கட்டிடத்திற்குள் செல்ல ராட்சத இரும்பு Rampம் அமைக்கப்பட்டுள்ளது. முதல் கட்ட நடவடிக்கையாக நடைப்பாதை ஆக்கிரமிப்பை அகற்றியும் இரண்டாம் கட்ட நடவடிக்கையாக கட்டிடத்தை இடித்து நான்கு புறமும் இடைவெளி, Parking வசதி அமைத்தால் அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்படாது என்பதை தெரிவித்து பொது நலன் கருதி கடந்த 05.04.2022 அன்று சென்னை மாநகராட்சி ஆணையர், உதவி ஆணையர்,உதவிப்

பொறியாளர் இவர்களுக்கு புகார்கள் அளித்து இதுவரை எவ்வித நடவடிக்கை எடுக்காததால் இம்மனு மேல்முறையீடு செய்யப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்".

2) மனுதாரர் திரு. கோ. கோவிந்தராஜ், தன்னுடைய 11.09.2024 நாளிட்ட கடிதத்தில் "கடந்த 10.09.2024 அன்று மனுதாரர் முகலிவாக்கம் வழியாக சென்று கொண்டிருக்கும் போது மாநகராட்சி அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி இரும்பு Ramp & Stepsகளை கட்டிட உரிமையாளர்கள் அகற்றியதை புகைப்படம் எடுத்து இம்மனுவுடன் இணைத்துள்ளேன் என்றும் மருத்துவமனை நிர்வாகம் ஏழை எளியோர்களுக்கு குறைந்த செலவில் மருத்துவம் செய்து வருவதாக அப்பகுதி மக்கள் கூறுகிறார்கள் என்றும் ஆகவே, அனைத்து புகார்களையும் இத்துடன் முடித்து கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்".

3) எனவே மேலே பத்தி 2ல் கண்டுள்ள மனுதாரரரின் கூற்றினை ஏற்று மனுதாரரின் 27.08.2024 நாளிட்ட புகார் மனு மீது மேல்நடவடிக்கை எடுக்க அவசியம் எழவில்லை என்று முடிவு செய்து அவ்வாறே இம்மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

4) 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 19–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. கோ. கோவிந்தராஜ்,
22/43, 15வது தெரு,
அசோக்நகர், சென்னை – 600 083

2) மண்டல அலுவலர்,
மண்டலம் – 12, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்,121, நாகிரெட்டி கார்டன் தெரு,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032

நகல் :

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்
இ.கோ./உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032

20/9/24

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).
20/9/24